-63-

தினகரன் நாளிதழ்

2.3.2021

சுண்ணாம்பு சுரங்கங்கள் குறித்த

# கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

சேலம், மார்ச் 2: சங்ககிரி பகுதியில் தனியார் சுண்ணாம்பு சுரங்கங்கள் குறித்த மக்கள் கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக கலெக்டர் அறிவித்துள்ளார்.

சங்ககிரி தாலுகா சின்னகவுண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள மஹாலட்சுமி சுரங்கங்கள் மற்றும் பல்வெரைசர் (சுண்ணாம்பு சுரங்கம்), தேவண்ணகவுண்டனூர் கிராமத்தில் உள்ள மோகன்குமார் (சுண்ணாம்பு சுரங்கம்) குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் இன்று (2ம் தேதி) காலை 11 மணி மற்றும் மதியம் 12.30 மணிக்கு நடக்க இருந்தது. ஆனால், தமிழக சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருப்பதால், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. கூட்டம் மீண்டும் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலரான கலெக்டர் ராமன் தெரிவித்துள்ளார்.

தினமணி நாளிதழ்
2.3.2021

# பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

**சேலம், மார்ச் 1:** சங்ககிரி, சின்னகவுண்டனூரில் உள்ள சுண்ணாம்பு சுரங்கம் தொடர்பான பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னகவுண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள மஹாலட்சுமி சுரங்கங்கள், பல்வெரைசர் சுண்ணாம்பு சுரங்கம், தேவண்ணகவுண்டனூர் கிராமத்தில் மோகன்குமார் சுண்ணாம்பு சுரங்கம் தொடர்பாக மார்ச் 2 ஆம் தேதி காலை 11, மதியம் 12.30 மணி அளவில் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெற இருந்தன.

தமிழ்நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருப்பதால் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது. கூட்டம் மீண்டும் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என ஆட்சியர் சி.அ.ராமன் தெரிவித்துள்ளார்.

தினமலர் நாளிதழ்
2.3.2021

# சேலம் அருகே சுரங்கம் அமைப்பதற்கான கருத்து கேட்பு நிகழ்ச்சி தள்ளி வைப்பு

சேலம், மார்ச்.2-

சேலம் அருகே சுரங்கம் அமைக்க பொது மக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் ராமன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகா, சின்னகவுண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள சுரங்கங்கள் மற்றும் பல்வெரைசர் (சுண்ணாம்பு சுரங்கம்) மற்றும் சேலம்தாலுகா, சங்ககிரி தாலுகா தேவண்ண கவுண்டனூர் கிராமத்தில் (சுண்ண....., சுரங்கம்) 2-ம் தேதியன்று பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் காலை 11.00 மதியம் 12.30 மணி அளவில் நடைபெற இருந்தது. இந்த கூட்டம் தமிழ்நாடு தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் இருப்பதால்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது.

கூட்டம் மீண்டும் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கலெக்டர் ராமன் தெரிவித்துள்ளார்.

★★மாலைமுரசு 28-2-2021 5

## சங்ககிரியில்

# மக்கள் கருத்துகேட்பு கூட்டம் ஒத்தி வைப்பு!

சேலம், பிப்.28–

சங்ககிரியில் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் சின்னக்கவுண்டனூர் கிராமத்தில் மகாலட்சுமி சுரங்கங்கள் பல்வரைசர் (சுண்ணாம்பு சுரங்கம்)மற்றும்தேவன்ன கவுண்டனூரில் உள்ள (சுண்ணாம்பு சுரங்கம் ) மோகன் குமார் பல்வரைசர் சுரங்கங்கள் உள்ளன. இவற்றின் மீது மக்கள் கருத்துகேட்பு கூட்டம் அடுத்த மாதம் 3ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது .

இது தொடர்பாக மீண்டும்கூட்டம்நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு கலெக்டரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.